(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 211.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 செத்தெம்பர் 20, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1197/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கடந்த 5 வருடங்களுக்கான,

(i) முட்டையின் மொத்த மற்றும் தலாவீத நுகர்வையும்;

(ii) இலங்கையில் முட்டை உற்பத்திக்கான செலவையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் தொகையையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் பெறுமதியையும்;

(v) முட்டை இறக்குமதியாளர்களுக்கு உண்மையில் வழங்கப்பட்ட மாணியத்தையும்

வருடாந்த அடிப்படையில் அவர் அறிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்ட சகல வரிகளையும் (நேரடி, மறைமுக) எவ்வளவு என்பதை வெவ்வேறாக அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1396/ '11

2.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மாத்தறை மாவட்டத்தின் திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில், வெல்லதொட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள தங்கஹ எல பாலம் புனரமைக்கப்படாததன் காரணமாக கடும் ஆபத்தான நிலைமை தோன்றியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாலத்தின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் இப்பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) தற்போது இதற்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2036/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கிரிகெட் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்காக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அந்த நிறுவனத்தினால் வருடாந்தம் செலவு செய்யப்பட்டுள்ள தொகை;

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலவு செய்துள்ள தொகை;

(iii) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளில் இருந்த நாட்களின் எண்ணிக்கை

வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகத்தர்கள் மேற்கூறியவாறு வெளிநாடு சென்றதனால் கிரிகெட் விளையாட்டுத்துறைக்குக் கிடைத்த சாதகமான அல்லது பாதகமான பெறுபேறுகள் யாவை;

(ii) வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களின் பயணச் செலவுகள் தங்குமிடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் சுற்றுலா விபரக் குறிப்புக்களை சமர்ப்பிப்பாரா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2217/ '12

4.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண,பொறியியல் சேவைகள்,வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகிந்த சிந்தனை - இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கொழும்பு நகரத்தில் குடிசைகளிலும் ஏனைய முறைசாரா வீடுகளிலும் வாழ்கின்ற மக்களுக்காக 65,000 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் இதுவரை நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மேற்படி வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ள மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2238/ '12

5\.

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) வடமத்திய மாகாண சபை சிறுநீரக நோயாளிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக தரக்குறைவான நீர் வடிகட்டும் சாதனங்களை முறைசாராத விதத்தில் கொள்வனவு செய்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நீர் வடிகட்டும் சாதனங்களின் கொள்வனவின்போது,

(i) செலவிடப்பட்ட பணத் தொகை மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட நீர் வடிகட்டும் சாதனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பின்பற்றப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை யாதென்பதையும்;

(iii) கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர், முகவரி மற்றும் சமர்ப்பித்த விலைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) நீர் வடிகட்டும் சாதனங்களின்,

(i) தரம் தொடர்பிலான பரிசோதனையை அரசாங்க நிறுவனமொன்றில் மேற்கொள்ளாது, கொள்வனவு செய்த நிறுவனத்திலேயே மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

(ii) பகிர்தளிப்பதை நிறுத்துமாறு கணக்காய்வாளர் நாயகம் உத்தரவிட்டிருக்கையில் தொடர்ந்தும் இவை கொள்வனவு செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) கொள்வனவிற்கான பணத்திற்கு அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தர் யாரென்பதையும்;

(iv) கொள்வனவானது அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக இடம்பெற்றுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) கொள்வனவு தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2296/ '12

6\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 'இசுறு பாடசாலை', மற்றும் 'நவோத்யா பாடசாலை' கருத்திட்டங்கள்,

(i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவை என்பதைம்;

(ii) ஆரம்பிக்கப்பட்டதன் குறிக்கோள்கள் யாவை என்பதையும்; அத்துடன்

(iii) தற்போதுகூட மேற்படி கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 'இசுறு பாடசாலை', மற்றும் 'நவோத்யா பாடசாலை' கருத்திட்டங்களுக்காக,

(i) ஈடுபடுத்தப்பட்டுள்ள உள் நாட்டுப் பணத் தொகை;

(ii) ஈடுபடுத்தப்பட்டுள்ள வெளி நாட்டுப் பணத் தொகை; அத்துடன்

(iii) வெளி நாட்டுப் பணம் வழங்கிய நிறுவனங்கள், வழங்கியுள்ள தொகை மற்றும் ஆண்டுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி கருத்திட்டங்களின் கீழ்,

(i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு தொடக்கம் இற்றை வரை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் யாதென்பதையும்;

(ii) அடுத்து வரும் பத்தாண்டு காலத்தில் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள இசுறு மற்றும் நவோத்யா பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) ஆயிரம் இரண்டாம் நிலைப் பாடசாலைகள் கருத்திட்டத்தில் உள்வாங்கப்படும் இசுறு மற்றும் நவோத்யா பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1877/ '11

7.

கௌரவ புத்திக பதிரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தில் வலல்லாவிட்ட பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குரிய நானகொட பாலத்தின் நிர்மாண வேலைகள் இடையில் நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாலத்தை நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை யாது;

(ii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின், நானகொட பாலத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2135/ '11

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் விஸ்தரிக்கப்பட்ட கொழும்பு – கண்டி பிரதான வீதியின் இருமருங்கிலுமுள்ள பாதுகாப்பு வேலியின் ஒரு மீற்றரை நிர்மாணிப்பதற்கு மதிப்பிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பாதுகாப்பு வேலியின் ஒரு மீற்றரை நிர்மாணிப்பதற்காக செலவான பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு வேலியின் முழுத் தூரம் எவ்வளவு என்பதையும்;

(iv) பாதுகாப்பு வேலிக்காக மதிப்பிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி பாதுகாப்பு வேலியை நிர்மாணிப்பதற்காக செலவான மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தூரத்திற்கு மேலதிகமாக பாதுகாப்பு வேலி நீடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி தூரம் எவ்வளவு என்பதையும்;

(iii) அவ்வாறு செய்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2189/ '11

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1970 - 1977 ஆண்டுகளின் போதான ஆட்சிக்காலத்தில் பாசிக்குடாவில் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அது எப்போது கண்டுபிடிக்கப்பட்டது என்பதையும்;

(iii) கண்டுபிடிக்கப்பட்ட பெற்றோலியத்தின் அளவையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் ஒற்றோபர் 2011 இல் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டதென தற்போதுள்ள பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சர் பிரகடனப்படுத்தினாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், கண்டுபிடிக்கப்பட்ட அளவையும்;

(iii) எப்போது அது உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்படும் என்பதையும்;

(iv) எண்ணெய், எரிவாயு விலைகள் எப்போது குறைக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2218/ '12

10.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகிந்த சிந்தனை - இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒரு இலட்சம் காணித் துண்டுகள் வழங்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் இதுவரை ஒரு இலட்சம் காணித் துண்டுகள் வழங்கப்படுவதற்கான வேலைத்திட்டம் நடைமுறைபடுத்தப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் தற்போது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இதன் மூலம் இதுவரை பயன்பெற்றுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2298/ '12

11.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் கல்வி முறைமையில் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களும் அவ்வாறான ஒவ்வொரு சீர்திருத்தமும் கொண்டுவரப்படுவதற்கு ஏதுவாயிருந்த நோக்கங்களும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சீர்திருத்தத்தின் கீழும் பாடசாலை பாடவிதானங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1878/ '11

12.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை கல்வி வலயத்தில் ஹால்பந்தெனிய ரத்ன வித்தியாலயத்தை மூடிவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், இப்பாடசாலையின் வளங்களை பாவித்து அரச தொழிற்சாலையொன்றை அல்லது வேறு நடவடிக்கையினை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின், அதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) அத்திட்டத்தின்படி பாடசாலையில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2136/ '11

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள்,நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி நிர்மாண, அபிவிருத்திக் கம்பனி தற்போது ஒழிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாணிப்பு, உபகரணங்கள் கம்பனியின் விலை பட்டியலிடப்பட்ட வாடகைக் கட்டணம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சொத்துக்கள் வாடகைக்கு விடப்படுதல் தொடர்பாக வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாணிப்பு, உபகரணங்கள் கம்பனிக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வீதி அபிவிருத்தி அதிகார சபை, வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாணிப்பு, உபகரணங்கள் கம்பனியில் முதலீடு செய்துள்ள நிதிக்கான பங்குச் சான்றிதழ்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி சான்றிதழ்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2190/ '11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 10 வருடங்களாக இலங்கையில் நடைபெற்ற தேர்தல்களின் எண்ணிக்கையையும்;

(ii) அனைத்து மாகாணசபைகளுக்குமான தேர்தல் ஒரே தினத்தில் நடைபெற்றனவா என்பதையும்;

(iii) இல்லையெனில், அவை ஏன் ஒன்றாக நடைபெறவில்லையென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2005 சனவரி 1 முதல் இற்றையத் திகதி வரை நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலுக்குமான மொத்த செலவை தனித்தனியாகவும்;

(ii) அடுத்த மாகாணசபைத் தேர்தலை எப்போது நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இலங்கையின் தேர்தல் முறைகளுள் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறை ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லையென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2299/ '12

15.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை பெருந்தோட்ட கல்வித் துறையின் அபிவிருத்திக்காக, மத்திய அரசின் கல்வி அமைச்சும் மாகாண சபை கல்வி அமைச்சுக்களும் நடைமுறைப்படுத்தியுள்ள வேலைத்திட்டங்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு வேலைத்திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பெருந்தோட்டக் கல்வித் துறையின் அபிவிருத்திக்காக அண்மைக் காலத்தில் செயற்பட்டுள்ள பல்வேறுபட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினாலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் அவற்றுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நிதிசார்ந்த பெறுமதிகள் வெவ்வேறாக யாது

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

திவிநெகும சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 9.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

10.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

11.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

காசிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

ரன்ஜித் அலுவிஹாரே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.